# அமெரிக்கத் தொழில் முதலீட்டை அள்ளித் தமிழ்நாட்டைத் தாங்கும் தவமுதல்வரே! வருக! வருக! வாழி! நீடூழி !!



வருக! வருக! வருக! வருக!
தருக! தமிழே! தவமே! - தருக
பெருவளம் நம்தமிழ் நாடு பெறவே!
வருக அமெரிக்கா மாண்பு!

அமெரிக்க நாட்டின் அருமை வளம்சூழ்
கமழும் தொழில்துறை கண்டே முதல்வர்
இதமாய்ப் பதமாய் எழுச்சி நயமாய்
உதவிசீர் கொண்டுவரும் ஓ!

யாரால் முடியும்எம் நன்றார் முதல்வர்போல்
வேரார் விழுமிய வெற்றிவிதை - பேரார்ந்த
மாமுதல்வர் வெல்இஸ்டாலின் மாமலை போல்நிமிர்ந்தே
வாமுதல்வ மாவருகை வாழ்த்து!

வளமார் அமெரிக்க மாமுத லீட்டை
உளமார் உறுதி உழைப்பால் - களப்பணி
கண்டுவென்ற மாமுதல்வ காணமகிழ் வோம்வருக!
தொண்டுஅரு ளேவருக! வே!

அய்யன் திருக்குறள்சொல் ஆட்சி செயலாட்சி
மெய்க்கீர்த்தி சூடிவரும் மேலாட்சி - துய்யமன
நம்முதன்மை மாமுதல்வர் நல்லாட்சி ஒன்றியத்தார்
அம்பெய்தல் மாற்றவரு க!

உலகுபுகழ் ஆட்சி உரிமைச்சங் கூதும்
இலகுபுகழ் இஸ்டாலின் எம்மான் - நிலம்போற்று
மூன்றாண்டு முன்னேற்றம் முத்தமிழ் நாட்டுமக்கள்
நான்காம்ஆண் டும்ஓங்கும் நன்று!

எல்லோர்க்கும் எல்லாம் எளியவர் ஏழைமக்கள்
வெல்லும் 'முதல்வன்' வினைத்திட்பம் - வல்லமை
மேலோங்க நாடுபல வேண்டு தொழில்துறைச்
சாலோங்கு வெல்பயணம் சான்று!

ஒன்றிய ஆட்சிசெயும் ஓரவஞ்ச கம்மீறி
நின்று நிலைக்கும் நெடிதுசெயல் - அன்றன்றே
ஓங்கும் உழைப்புழைப்பே உச்சத் தொழில்வளம்
தாங்கும் அமெரிக்கா தந்து!

நான்காம்ஆண் டில்முதல்வர் நாயகர்நம் இஸ்டாலின்
வான்தந்த மாவரம்போல் மன்னுமாட்சி தான்தொடர்ந்தே
வேண்டு தொழில்துறை வேண்ட அமெரிக்கா
காண்ட பயணம் களிப்பு!

செற்றாரும் போற்றும் செயலே வருகவே!
எற்றென்றும் ஆளுமை ஏந்தல் வருகவே!
மாற்றுத் தொழில்துறை மாதமிழ் நாடுகொளப்
போற்றும் முதல்வர்வரு க!!

வாடிய நெற்பயிர்க்கு வான்மழை வந்ததுபோல்
பாடிய மாப்புலவர் பார்க்கின்ற வள்ளல்போல்
நீடியநாள் காணாஎம் நெஞ்சம் மகிழ்வதுபோல்
நாடிமனை யோடுவரு க!

தாயகம் தாள்பதித்த தாயுமான வாவருக!
சேயகம் தான்குளிர தேவைஉண வீந்தவனே
ஆயகலை ஞர்அன்பே! அறமே! வருகவே
சீயமே வருகமுதல் வா!

வருக! வருக! வருக! வருக!
தருக தமிழே! தவமே! - தருக
பெருவளம் நம்தமிழ் நாடு கொணர்வோய்!
வருகஅமெ ரிக்கா விருந்து!



**பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**
**உலக அமைப்பாளர் – பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்**

## திருச்சி மாநில மாநாடு!

திருச்சியில் நடைபெறும் மாநில மாநாடு, திக்கற்றோருக்கு ஒரு திட்டம் காட்டும் திருச்சபை. வாழ்விழந்தோருக்கு வழிகாட்ட எடுத்துக் கொள்ளப்படும் ஒரு நன்முயற்சி–வழி தவறியோருக்கு நன்னெறி பற்றிய விளக்கம் அளித்திடும் பெருமுயற்சி ! ஒளியிழந்த கண்ணினரே, நமது முன்னோர் வாழ்ந்த வகை கூறிடக் கேண்மின்; பிறகு உமது கண்களிலே ஓர் புத்தொளி பூத்திடும் ! – என்று எடுத்தியம்பும் ஓர் மருத்துவக் கூடம், இம்மாநாடு ! **– அண்ணா**



### நாமக்கல் மேற்கு மாவட்டம் – திருச்செங்கோட்டில்

# பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் வழங்கினார்!

நாமக்கல், செப். 16-

ஆயிரங்காலத்து பயிராம் தி.மு.க எனும் மாபெரும் மக்கள் எழுச்சி இயக்கத்தை தோற்றுவித்த வரும், தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதன் மூலம், தாய்க்குப் பெயர் தந்த தலைமகனும் ஆன பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு, நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு நகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வாலரை கேட் பகுதியில் உள்ள கொடி கம்பத்தில் சமத்துவம் மற்றும் சமுக நீதி காக்கும் நமது கழக இரு வண்ண கொடியை மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஏற்றினார்.

பேரறிஞர் அண்ணா அவர்கைளின் சிலை அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், சந்தைப்பேட்டை மேட்டில் நடைபெற்ற கொடியேற்று விழாவில் கழக மூத்த முன்னோடியும், மாவட்ட வர்த்தக அணி துணை தலைவருமான தியாகராஜன், வேலூர் ரோடு, TAPCMS அருகில் திருச்செங்கோடு நகர மன்ற தலைவர் நளினி சுரேஷ் பாபு ஆகியோர் கழக இரு வண்ண கொடி ஏற்றி பொதுமக்களுக்கும் கழகத்தினருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் நகரக் கழக செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய கழக செயலாளர் தங்கவேல், ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ராஜபாண்டி ராஜவேலு, மாநில சமூக வலைதள பொறுப்பாளர் ரியா மாவட்ட சார்பு நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நந்தனம் மதி தலைமை! எஸ்.முரளி முன்னிலை! கழக முப்பெரும் விழா!

# மயிலை மேற்கு - கிழக்குப் பகுதியில் கழக முன்னோடிகளுக்கு பரிசு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்குகின்றனர்!

சென்னை, செப்.16-

மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி, மயிலை கிழக்குப் பகுதிச் செயலளார் எஸ்.முரளி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

கழக முப்பெரும் விழா, கழக பவள விழாவை முன்னிட்டு சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு / கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் இன்று (16.09.2024 - திங்கள் கிழமை) மாலை 6.00 மணியளவில் நந்தனம் விளையாட்டு திடல் 5வது பிரதான சாலை, நந்தனம் ஆர்ச், ஆவின் தலைமை அலுவலகம் எதிரில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு முப்பெரும் விழா - தி.மு.க. பவள விழா முன்னிட்டு கழக முன்னோடிகளுக்கு சிறப்பு செய்தல் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி தலைமையில், மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் நடைபெறுகிறது.

ஜி.ஆர்.ராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக், பா. பாக்கியதாஸ், அகல்யா விஸ்வ நாதன், ஜி.முருகையன், எஸ்.முனுசாமி, பி.எல். தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், டி.ராஜவேலு, சீ. கிருஷ்ணமூர்த்தி, மு.இ.ஏழுமலை, மூ.ராஜேந்திரன், ஏ.தாஸ், மா.பா.அன்பு, அ. தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி வரவேற்பில்

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மற்றும் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் கழக முன்னோடிகளுக்கு சிறப்பு செய்து பேருரையாற்றுகின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் அ.நாகராஜன், எஸ். ஆர்.ராஜா, சுரேஷ்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

எனவே இந்நிகழ்விற்கு மாநில, மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2), கழகத் தோழர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் நந்தனம் கி.மதி, எஸ்.முரளி, ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி தலைமை!

# அரக்கோணம் நகரக் கழகம் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா!

## கழக முன்னணியினர் பங்கேற்பு!

அரக்கோணம், செப். 16 -

அரக்கோணம் நகரத்தில் பேரறிஞர்அண்ணாஅவர்களின்116வது பிறந்தநாளையொட்டி முதல்வர் கழகத் தலைவர் ஆணைக்கிணங்க. கைத்தறி மற்றும் துணிநூல் துறைஅமைச்சர் - மாவட்ட கழகசெயலாளர்ஆர்.காந்தி வழிகாட்டலின்படி நேற்று சுவால்பேட்டை பிள்ளையார்கோயில்அருகில்காலை 9:30.மணி அளவில் .பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு

நகரச்செயலாளர்வி.எல். ஜோதி மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி மரியாதை செலுத்தினர்.

இரயில்வேகேட்அருகில் இருந்து ஊர்வலமாக சென்று. அரக்கோணம் நகரத்தில் உள்ள அணைத்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் மு.கண்ணையன், என்.ராஜ்குமார் ,லட்சுமி பாரி , துரை சீனிவாசன் , கோ.வ.தமிழ்வாணன் , நந்தாதேவி , எஸ்.ரமேஷ்பாபு ஆர்.கே.லிங்கம் , வி.பாலகிருஷ்ணன், எம்.கே.சிவா, எஸ்.சரவணகுமார் , எஸ். பிரசாத் , எஸ்.பி.மாலின் , ஜி.ஜெனிஸ்குமார் , டி.அந்தோணி , எம்.எம்.வெங்கடேசன் , நிலவுபாபு, ஆனந்தன் , நெப்போலியன்,

எல்.பஞ்சாட்சரம் , எஸ். செந்தில்குமார், எல்.ரமேஷ்பாபு, டிவி.சதீஸ், எ.சேகர், என்.லோகி, தனஞ்செழியன், எ.கே.பாரி,

ஜெய்சங்கர், எஸ்.வேலு, எல்.எழில், எஸ்.கார்த்தி, வடிவேல்வண்ணன், எஸ்.கமலக் கண்ணன், எ.பி.எம்.சரவணன், அர்ஜுனன் , எ. கதிரவன், ஸ்டாலின், பழனி, ஜான்சன், க.ரக்ஷிதா , கங்காதரன் , சிட்டிபாபு , திருமதி.ரசியா மற்றும் வட்ட பிரதிநிதிகள், நகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , நகர மகளிர் அணி வழக்கறிஞர் அணிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி

# 112வது வட்டத்தில் கழக முப்பெரும் விழா - கழக பவள விழா - கழகக் கொடியேற்றுதல்!

## வட்டச் செயலாளர் வரதை த.பரி வேண்டுகோள்!

சென்னை, செப்.16-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112வது வட்டச் செயலாளர் வரதை த.பரி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, கழக மருத்துவ அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், மருத்துவ அணி துணைச் செயலாளர் கலைகதிரவன், மாவட்டப் பொருளாளர் ஜே.எஸ். அகஸ்டின்பாபு, தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜோஸ் டேனியல் ஆலோசனைப்படி நாளை (17.9.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணி அளவில் டிரஸ்ட்புரம் 6வது தெரு சந்திப்பில் கழகக் கொடியேற்றி கழக மூத்த முன்னோடி வட்ட அவை தலைவர் எஸ்.மனோகர் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்குகிறார்.

நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் : புலியூர் 1 வது பிரதான சாலை, மைனர் டிரஸ்ட்புரம், தாஸ்புரம், வரதராஜபேட்டை பிரதான சாலை, கலைஞர் படிப்பகம், ஜக்கரியா காலனி, நேரு தெரு, சூளைமேடு காந்தி சிலை, சௌராஷ்டிரா நகர் 9வது தெரு. சௌராஷ்டிரா நகர் 1வது தெரு.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ 2, பி.எல்.சி உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு வட்டச் செயலாளர் வரதை த.பரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சென்னை தெற்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் – சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் என்.வி.என்.கனிமொழி சோமு, துணை மேயர் மு.மகேஷ்குமார் , சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் , பாலவாக்கம் க.சோமு, தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி மணிமாறன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன், மாவட்டப் பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், சு.சேகர், துரை.கபிலன், கே.கண்ணன், மு.ராசா, வி.இ.மதியழகன் , நொளம்பூர் வே.ராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் துரை. வீரமணி, கோவிலம்பாக்கம் வெங்கடேசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் , எம்.கே.ஏழுமலை , பி.ஜே.பாஸ்கர், ஆர். பாலசுந்தரம், உள்ளிட்ட மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.